Dinakaran
02/04/

திருவள்ளூரில்

குடிநீர் பாட்டில்களில் போலி ஐ.எஸ்.ஐ. முத்திரை அச்சடிப்பு

இந்திய தர நிர்ணய அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

சென்னை, ஏப்.2–

திருவள்ளூர் மாவட்டத்தில் சில இடங்களில் குடிநீர் பாட்டில்கள் மற்றும் கேன்களில் ஐ.எஸ்.ஐ. தர முத்திரை போலியாக அச்சிடப்படுவதாக இந்திய தர நிர்ணய அமைவனத்துக்கு புகார்கள் வந்தன. இதையடுத்து திருவள்ளூர் மாவட்டத்தில் பல இடங்களில் இந்திய தர நிர்ணய அதிகாரிகள் அதிரடி ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வில் திருவள்ளூர் அலமாதி கிராமம் ஈஸ்வரன் கோவில் தெருவில் செயல்படும் எஸ்.பி.எம். மினரல் வாட்டர் கம்பெனியில் தயாரிக்கப்படும் 500 மி.லி. குடிநீர் பாட்டில்களில் போலியாக 'கோலி' என்ற நிறுவன பெயருடன் ஐ.எஸ்.ஐ. முத்திரை போலியாக அச்சிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஐ.எஸ்.ஐ. முத்திரையை போலியாக அச்சிடுவது தெரியவந்தால் சம்பந்தப்பட்டவருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் அல்லது ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

மேற்கண்ட தகவல் இந்திய தர நிர்ணய அமைவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

तिरुवल्लूर पेयजल कम्पनी पर छापा

चेन्नई। भारतीय मानक ब्यूरो के अधिकारियों की टीम ने आईएसआई मार्क की संदिग्ध दुरुपयोग की गोपनीय सूचना के आधार पर तिरुवल्लूर जिले में प्रवर्तन खोज और जब्ती अभियान बुधवार को चलाया।

चेन्नई शाखा कार्यालय2 के तहत किए गए अभियान के दौरान अलामती ग्राम में मेसर्स एसबीएम मिनरल वॉटर कम्पनी की 500 मिलीलीटर में गोली ब्रांड के नाम से नकली मार्क और निर्माता के लायसेन्स को जब्त किया। भारतीय मानक ब्यूरो के अधिनियमों के तहत उल्लंघन के विरुद्ध एक साल की सजा या 50 हजार रुपए का प्रावधान है।